# வாக்குமூலம்
# மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம், இலுப்பூர்
# வழக்கு எண்: CC – 29/2023

## வழக்கு சாட்சி :PW4(LW5)

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | கண்ணையா | ஜாதி | : | |
| தந்தை பெயர் | : | கிருஷ்ணன் | தொழில் | : | விவசாயம் |
| கிராமம் | : | மேட்டுபட்டி | சமயம் | : | |
| தாலுக்கா | | | வயது | : | 41 |

(எதிரிகள் ஆஜர் இல்லை. எதிரிகள் தரப்பில் குவிமுச பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது)

Solemnly affirmed in accordance with the Indian Oaths Act–1969 Section –6(2) on the day 17th day of November 2025.

சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார் – (சாட்சி அவர் கூறும் வாக்குமூலத்தை நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யும் போது அவர் உடனுக்குடன் பார்க்கும் விதமாக அவர் முன்பாக ஒரு கணினி திரை வைக்கப்பட்டுள்ளது).

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது மேட்டுப்பட்டியில் குடியிருந்து வந்து விவசாய வேலை செய்து வருகிறேன். கடந்த 10.10.2021 ம் தேதி காலை 11.00, 11.30 மணியளவில் நானும், எனது அண்ணன் முருகேசனும் எங்களது வயலில் வரப்பு வெட்டி வேலை செய்து கொண்டிருந்தோம். அப்போது சக்திவேல் , நிரோஷா என்பவரது பிரச்சனை தொடர்பாக போலிசார் சம்பவ இடத்தை பார்வையிட்டு அன்னவாசல் போலிசார் வரைபடம் வரைந்த போது நானும், எனது அண்ணன் முருகேசனும் சாட்சியாக உடன் இருந்து பார்வை மகஜரில் கையொப்பம் செய்தோம். என்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகஜரில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். **பார்வை மகஜர் அ.சா.ஆ. 2 /PW4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலீசார் என்னை விசாரித்தனர். பின் மற்றொரு கையொப்பம் வாங்கினார்கள். அதில் நான் கையொப்பம் செய்தேன். என்னிடம் காண்பிக்கப்படும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். **கைப்பற்றுதல் மகஜரில் உள்ள கையொப்பம் மட்டும் அ.சா.ஆ. 3/PW4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**போலிசார் ஒரு கட்டையை மட்டும் வைத்திருந்தனர். வழக்கு குறித்து போலிசார் என்னை விசாரித்தனர்.

**(அரசு தரப்பில் சாட்சியை பகுதியளவு பிறழ்சாட்சியாக கருதி சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய அனுமதிகோரப்பட்டு அனுமதி அளிக்கப்பட்டது)**

<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை :</u>

மேற்சொன்ன தேதியில் சம்பவத்திற்கு பயன்படுத்திய கருவக்கட்டையை எங்கள் முன்னிலையில் கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றினார்கள் என்றால் சரியல்ல.

**<u>எ.த.கு.வி</u>**

இந்த வழக்கில் புகார் கொடுத்துள்ள நிரோஷா என்பவரை எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. சக்திவேல், பாஸ்கர், கவிதா ஆகியோர்களை எனக்கு தெரியுமா என்றால் சக்திவேலை தெரியும். நானும் கோனகுறிச்சிப்பட்டியா என்றால் பரம்பூர் போலிசார் என்னிடம் கையெழுத்து வாங்கிய பேப்பரில் என்ன எழுதப்பட்டிருந்தது என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான் . வரைபடம் வரைந்ததாக சொல்லப்படும் இடத்திற்கு நான் வருவதற்கு முன்பாகவே வரைந்து வைத்திருந்தார்களா என்றால் வண்டியில் இருந்து எடுத்து வந்து கொடுத்தார்கள். கட்டையை கையில் வைத்திருந்தார்களா, அல்லது கொண்டு வந்தார்களா என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். நான் எத்தனை பேப்பரில் கையொப்பம செய்தேன் என்றால் இரண்டு பேப்பரில் கையொப்பம் செய்தேன். இரண்டு பேப்பரில் கையொப்பம் செய்தது ஒரு வழக்கிற்காகவா, அல்லது வேறு ஒரு வழக்கிற்காகவும் சேர்ந்து செய்தேனா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. சம்பவம் எத்தனை நாட்களுக்கு முன்பாக நடந்தது என்ற விவரம் எனக்கு தெரியாது என்றாலும், போலிசார் என்னிடம் தெரிவிக்கவில்லை என்றாலும் சரிதான்.